கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 46/2018

வாதி தரப்பு சாட்சி –1 பெருமாள் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 10.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

__3, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை__

1. யாரின் பெயருக்கு அடமானம் கொடுக்கப்பட்டது என்றால் எனது மனைவி செம்பாயி பெயருக்கு கொடுக்கப்பட்டது. எந்த சர்வே எண்ணிற்கு அடமானம் கொடுக்கப்பட்டது என்றால் சர்வே எண் தெரியாது. எவ்வளவு விஸ்தீரனத்திற்கு அடமானம் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. அடமானம் கொடுக்கப்பட்ட இடத்திற்கு வடபுறம் கிழமேல் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்கே நியாயவிலை கடை உள்ளது என்றால் சரிதான். அதற்கு மேற்கே தென்வடல் சிமெண்ட் ரோடு உள்ளது என்றால் சரிதான். எனது இடத்திற்கு கிழக்கே உள்ள காலி இடத்திற்கு தெற்கே தான் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் நிலம் கிரையம் வாங்கியுள்ளார்களா என்றால் சரிதான்.

2. மேற்படி நிலத்தை 2 மற்றும் 3 பிரதிவாதிகள் முத்துவேல் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரையம் வாங்கி 20 வருடங்கள் இருக்கும் என்றால் அதற்கும் மேல் இருக்கும். மேற்படி கிரைய நிலத்திலேயே வடக்கே செந்திலும், தெற்கே தங்கராசும் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி நிலம் மற்றும் வீட்டிற்கு செல்ல எனக்கு அடமானம் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு கிழக்கே தென்வடலாக அவர்களுக்கு பாதை உள்ளது என்றால் சரிதான். அடமானம் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு அத்தாக கிழக்கே தென்னை மரங்கள் உள்ளது என்றும், அதை தொடர்ந்து தென்வடலாக கம்பி வேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. அடமானம் கொடுக்கப்பட்ட இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கொட்டனை போட்டு பால் சொசைட்டிக்கு நான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். நியாயவிலை கடைக்கு மேற்கே உள்ள சிமெண்ட் ரோட்டை

ஒட்டி உள்ள ஓட்டுவில்லை வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி ஓட்டுவீடு பூர்வீக வீடா என்றால் எனது பாட்டனார் காலத்திலிருந்து உள்ள வீடாகும். எனக்கு செம்பாயி மற்றும் வசந்தி என இரண்டு மனைவிகள் உள்ளனர் என்றால் சரிதான். செம்பாயி என்பவர் இறந்து விட்டார். நான் தற்போது வசந்தியுடன் குடியிருந்து வருகிறேன்.

4. **என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது போல் தான் தாவா சொத்து அமைப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கம்பி வேலிக்கு கிழக்கே பிரதிவாதிகளுக்கு பாதையாக செல்லும் இடத்தையும் எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லி பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. எனதுமனுவின் அடிப்படையில் வருவாய் துறையில் அடமானம் கொடுக்கப்பட்ட இடத்தை அளந்து அத்து காண்பித்து மேற்படி இடமானது கிழக்கே உள்ள தென்னை மரத்துடன் அத்து முடிவாக கூறி அதற்கு கிழக்கே இடம் இல்லை என்று வருவாய் துறையினரால் அத்து காண்பிக்கப்பட்டதா என்றால் இல்லை.

5. மேற்படி பாதைக்கு கிழக்கே பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தோட்டம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையை சுமார் 40 வருடங்களுக்கு மேலாக பிரதிவாதிகள் பாதையாகவும், வைக்கோல் போர் வைத்து ஆடு, மாடுகள் கட்டி வைத்தும அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் தான் 50 வருடங்களாக அனுபவம் செய்து வந்தேன். தற்போது வேலியை பறித்துவிட்டு பிரதிவாதிகள் ஆக்கிரமித்து அனுபவம் செய்து வருகிறார்கள். கம்பி வேலிக்கு கிழக்கே உள்ள பாதையை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றும், பிரதிவாதிகள் தான் நீண்ட காலமாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**3, 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்க இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**